அனுப்புநர்

திரு.சா. சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை– 600 006.

பெறுநர்

1. அனைத்து முதன்மைக் கல்விஅலுவலர்கள், மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

ந.க.எண்.019373 /எப்.1/2021 நாள்:25.03.2022

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6 – மே–2022 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு – பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்ய தெரிவித்தல் – சார்பு.

பார்வை: இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்:16.03.2022.

*****

பார்வையில் காணும் கடிதத்தில் நடைபெறவுள்ள மே–2022 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் GR எண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் 18.03.2022 முதல் 23.03.2022 வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் இணையதளத்திற்கு (www.dge.tn.gov.in) சென்று பதிவிறக்கம் செய்து கொள்வதற்கும், அப்பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் அதனை 19.03.2022 முதல் 23.03.2022 வரையிலான நாட்களில் பள்ளித் தலைமையாசிரியர்கள் மேற்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட மே–2022 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை, அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் 26.03.2022 பிற்பகல் முதல் 09.04.2022 வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளமான www.dge.tn.gov.in–க்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் விவரங்கள் அடங்கிய, Excel Format–ல் உள்ள பெயர்ப்பட்டியலினை (Nominal Roll) அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் **28.03.2022** முதல் **09 .04.2022** வரையிலான நாட்களில் தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்.**
**இயக்குநர்**